திட்டம் ஆரம்பிக்க இருக்கிறது. அதற்கும் லா ஆபீசர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்தக் கொள்கை விளக்கத்திலே அப்படிப்பட்ட திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல ஆண்டுக்காலமாக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு அந்தப் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஏன் அரிசன மக்களுக்கு, அந்த வழக்கறிஞர்களுக்கு மட்டும் இந்த சிறப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது? அப்படி எடுப்பதாலே அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம் வந்து விடும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து, இந்த லா ஆபீசர்கள் தேர்வுக் கான சிறப்புப் பயிற்சித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக இதுஅளிக்கப்படுகிறதா என்பதைப் பற்றிய அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் 'லா கிராஜுவேட்க்கு, முன்பு இருந்த இந்தத் திட்டத்தின் மூலமாக இந்த ஆதி திராவிட் ஜூனியர் லாயர்களுக்கு, அவர்கள் அந்தத் தொழிலை தொடங்கு வதற்கு 750 ரூபாயும், அதைப்போலவே அலமாரி, புஸ்தகங் கள் வாங்குவதற்கு 750 ரூபாயும், ஆக மொத்தம் 1,500 ரூபாய் ஒரு ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் —15 பேர்களுக்கு கொடுக் கின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப் போல அடுத்து இந்தத் திட்டத்தையும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இதைப்போன்ற லா ஆபீசர்கள் தேர்வுக்கான பயிற்சி கொடுக்கின்ற திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

எரகுடியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

602—(*வினா எண். 6974)திரு.வி. தங்கவேலு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம் எரகுடியில் ஆதி திராவிடர் களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எ, அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கனம் ஸ்ரீ சபாநாயகர் அவர்களே, எரகுடியில் ஆதி திராவிடக் குடியிருப்புகள் கட்டு வதற்காக அரசிடம் திட்டம் உள்ளதா என்ற கேள்விக்கு நான் எதிர்பார்த்தமாதிரியே கனம் ஸ்ரீ ஆதி திராவிட அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். இங்கே ஆதி திராவிடர் களுக்கு வீடு கட்டித் தரக்கூடிய குடியிருப்பில், தற்போது காலனி என்று சொல்லி, ஊருக்கு அப்பால் இப்படிப்பட்ட குடியிருப்புகளைக் கட்டித் தருகிறார்கள். எரகுடியில் அந்த வீடுகளைக் கட்டாமல் போனாலும், எஞ்சியிருக்கக்கூடிய ஆதி திராவிடக் குடியிருப்புகளை, ஜாதி இந்துக்களோடு ஒட்டி வாழ்வதற்கு ஏற்றாற்போல தமிழகத்தில் வீடுகள் கட்டக் கூடிய திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் கட்டு கின்ற வீடுகள் அவர்கள் இருக்கின்ற இடத்திலே கட்டுகின்ற திட்டம்இருக்கிறது.அதைப்போல் அவர்களுக்குப் பட்டா கொடுக் கின்ற இடத்திலே வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டமும் இருக் கிறது.மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜாதி இந்துக்கள் வாழ் கின்ற இடத்திலேஅந்த வீடுகளைக் கட்டவேண்டும் என்று சொன் னார்கள். ஆனால் இந்தத்திட்டமே ஆதிதிராவிடர்நலத்துறையின் மூலமாகதாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றஇடத்தில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கின்ற அந்த வீட்டின் பக்கத்திலே, அதே இடத் திலே இவர்கள் வாழ விரும்பினால் அவர்களுக்கும் இனாமாக வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இருக்கிறது. ஆகவே அந்த மக்கள் இங்கே வந்து வசதியாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கு மானால், அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டமும் நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 9–50)

திரு. வி. தங்கவேலு : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஆதி திராவிடர் நலத்துறைஅமைச்சர் அவர்கள் இவ்வளவு நல்ல ஒரு பதிலைத் தந்ததற்கு நன்றி. இன்றைக்கு டெல்லி போன்ற மாநகரங்களில்,ஜாதி இந்துக்களும்அரிசனங்களும்சேர்ந்து வாழ்வதற்கேற்றாற்போல் வீடுகளை அழகாக கட்டி வருகிறார் கள். அப்படிப்பட்ட திட்டத்தை இங்கு அமுல் செய்வதற்கு அந்த ஆதிதிராவிடக் குடியிருப்புக்களில் வீடு கட்டித் தருவதற்கு அதிகப் பணம் ஒதுக்கீடு செய்ய முடியுமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தாட்கோ மூலமாக வீடு கட்டு கின்ற திட்டத்தில் ரூ.4,000 என்று இருந்தது. அதைத் தற்போது தான், 1984-ல்தான் ரூ. 6,000 ஆக உயர்த்தியிருக்கிறோம். நான் கூட மானியக் கோரிக்கையிலே சொல்லும்போது, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, வருகின்ற நிதிநிலைக்கேற்ப, ரூ. 10,000-லே கட்டுகின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப் பிட்டேன். அந்தத் திட்டம் வருகின்றபொழுது, சிறப் பாக அந்தக் குடியிருப்பைப் கட்டிக் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பின்தங்கிய மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மையங்கள்.

603—(*வினா எண். 4932) மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியற் கல்லூரிகளில் அனுமதிக்காக நடைபெறும் நுழைவுத் தேர்வுக்கு பின்தங்கிய மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அர சிடம் உள்ளதா ?

மாபுமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அனுமதி பெற நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளுக்குப் பயிற்சி யளிப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி சென்னை யில் உள்ள தனிப்பயிற்சி நிலையம், திருச்சி ஈ. வே. ரா. அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரி, மதுரை மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகிய நான்கு மையங் களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர் களுக்கு நடப்பாண்டு முதல் நுழைவுத் தேர்வுப் பயிற்சியளிக்கப் படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பிற்பட்ட மாணவர்களுக்கு நுழைவுத் தேர் வுக்கு வருகிற ஆண்டிலேயிருந்து பயிற்சி அளிக்கப்படும் என்ற விவரங்களை அறிவித்தார்கள். மாநிலம் முழுவதற்கும் நான்கே நான்கு மையங்களில்தான் அது தொடங்கப்பட இருப்பதாக